உ
சிவமயம்

நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்
பெருமான்மீது பாடிய

# பத்திரசக்கீர்த்தனைகள்



ஆக்கியோன்:
விழிசைச்சிவம்

அச்சுப்பதிப்பு:
குகன் அச்சகம் - தெல்லிப்பழை

பிரபவ ௵ தை ௴ 1988

விலை: ரூபா 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான்மீது விழிசிட்டியில் வசிக்கும் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் பத்திரசக் கீர்த்தனைகள் 20 இயற்றி வெளியிடுகின்றூர்கள்; அவர் ஓர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்; இக்கோயிலோடு நெருங்கிய தொடர்பு உடையவர்; 1937ஆம் ஆண்டு தொடக்கம் மாதமுதல் ஞாயிற்றுக்கிழமைப்பூசை செய்வித்துவருபவர். இக்கோயிலில் நடைபெறும் புராண படனங்களில் முக்கியபங்கு வகிப்பவர். நகுலகிரிப் புராணத்திற்கு உரை எழுதிச் சாகித்திய மண்டலப்பரிசு பெற்றவர். இக்கோயிலுக்குத் தம்மாலியன்ற தொண்டு செய்யவேண்டுமென்னும் விருப்பு உடையவர். பாடல்களின் பின்னுல் கோயில் வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது. அடியார்கள் ஒவ்வொரு புத்தகம் வாங்கி ஆதரிப்பீர்களாக; புத்தகம் அச்சிடும் செலவுநீக்கி மீதிப்பணம் கோயில் திருப்பணிக்கே கொடுப்பதாக எண்ணியுள்ளார். அவருக்கு எம்பெருமான் எல்லா நலன்களும் அருளவேண்டுமென வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

நகுலேஸ்வரம்,
கீரிமலை.
22-12-87

இங்ஙனம்
ஜகத்குரு கு. நகுலேஸ்வரக்குருக்கள்
கோயில் ஆதீனகர்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

## நகுலேசுரர் துதி

வைய மீதினி லுயிர்களுக் கிகபரம் வழங்கத்
தைய லாணகு லாம்பிகை தணந்திடா தமரச்
செய்ய மேனிகொண் டமர்ந்தரு ளுதவுதெய் வீகத்
துய்ய தோர்நகு லேசன திருபதந் துதிப்பாம்.

## நகுலாம்பிகை துதி

நாத னுமர னைந்தெனுந் தொழிலதை நடத்தத்
தீதி லாததோர் திருவருட் சத்தியாய்த் திகழ்ந்து
காத லோடுயர் நகுலமால் வரையிடங் கவினும்
ஏதி லாநகு லாம்பிகை யெழிற்பதந் துதிப்பாம்.

நகுலாம்பிகா சமேத நகுலேசுவர சுவாமி கோயிலுக்கு அடியேன் இயன்ற தொண்டுகள் செய்யவேண்டுமென்ற மனவுந்தலினுலேயே பத்திரசக் கீர்த்தனைகள் சிலவற்றை இயற்றினேன். அவைகள் பெரும்பாலும் பழைய கீர்த்தனங்களின் மெட்டுகளிலேயே இயற்றப்பட்டன. பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும், இசைமணி பொ. முத்துக்குமாரு அவர்களுக்கும் பாடல்களைக் காட்டினேன்; அவர்கள் பாடல்கள் முழுவதையும் படித்துப்பார்த்து இவை அச்சிட்டு வெளியிடக்கூடிய தகுதிவாய்ந்தவை எனக்கூறிச் சில திருத்தக்குறிப்புகளும் தெரிவித்தனர். அவர்களது கருத்துக்களை அனுசரித்துப் பாடல்களை அச்சிடுவித்து வெளிப்படுத்த முன்வந்தேன். 1985 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இவை இயற்றப்பட்டன. எனினும் அச்சிடுவிக்கும் செலவுசம்பந்தமான கஷ்டத்தினுல் சிறிதுகாலஞ்சோர விட்டுவிட்டேன். குகன் அச்சகத்தினரும் கோயில் ஆதீனகர்த்தரும் சில சலுகைகள் செய்வதாக வாக்களித்தமையால் தற்போது அப்பாடல்களை அச்சிடுவித்து வெளிப்படுத்த முன்வந்தேன். இப்புத்தக விற்பனையால் வரும் இலாபத்தைக் கோயில் திருப்பணிக்கே கொடுப்பதாகத் தீர்மானித்துள்ளேன். அன்பர்கள் ஒவ்வொரு புத்தகம் வாங்கிப் பாடல்களைப் படிப்பதோடு திருப்பணிக்கும் உதவிசெய்த புண்ணியத்தைப் பெறுவீர்களாக.

வணக்கம்

விழிசிட்டி,
தெல்லிப்பழை.
1 - 1 - 1988

செ. சிவசுப்பிரமணியம்
ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலாம்பிகாதேவி சமேத நகுலேசுவரப் பெருமான்மீது பாடிய

# பத்திரசக் கீர்த்தனைகள்

இராகம் : சிந்துபைரவி                தாளம் : ரூபகம்

பல்லவி

நகுல கிரிக்குநாம் நேராய் நம்பனைக்
காணப் போவோம் எல்லாம் வாருங்கள்
நேராய்ச் சீராய்     —(நகு)

அநுபல்லவி

பிறந்து வளர்ந் தென்ன பயன்
பணிந்திடும் பரன்பதம்     —(நகு)
உண்டு உடுத்து வாழ்ந் தோம்
ஊமர்களா கத்திரிந்தோம்     —(நகு)
அன்புடன் அடியார் புகழ்ந்து மகிழ்ந்து
இன்புடன் தினம் இறைஞ்சி ஏத்தும்     —(நகு)

சரணம்

நகுலமுனிவரும் நன்முசுகுந்தனும்
நளமகாராசனும் நல்லவில்விசயனும்
தொழுதிடவந்தனர் துயரெலாந்தீர்ந்தனர்
பழுதிலேஇப்பதிப் பெருமைசொலப்போமோ

மாருதப் பிரவல்லி வந்தாள்
மாமுகந் தன்னையே தீர்த்தாள்
மன்னனும் இராமனும் வந்து
மாசெலாம் நீங்கியே சென்றான்
சோருத லின்றியே நீவிர்
தொழுதுமே நன்மை பெறுவீர்;     —(நகு) (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : தோடி                    தாளம் : ஆதி

பல்லவி

தாயே நகுலாம்பிகா தேவிஉனைத் துதித்தேன்
நாயேன் கடைத்தேறிட நீயே யருள்புரிவாய் —(தாயே)

அநுபல்லவி

அம்மையேகேட் டருள்என்றன்
வெம்மையான வல்வினைகள்
தம்மையேயழித் தருள்வாய்
மும்மையுந் துணை செய்குவாய் —(தாயே)

சரணம்

காலினிற் சிலம்பலம்பக்
கைவளைகுலுங்க முத்து
மாலைகளசைய என்முன்
வந்திடுவாய் அம்மையே
பாலனன்று கூவியழைத்தான்
அழைத்த வுடன்
பாலைக் கேட்கிறானென்று
வாயிற்பால் கொடுத்தாயே
பாலின் இனியமொழிப்
பார்ப்பதியே உன்னையே
சாலவும் பணிந்துநின்றேன்
சரணம் சரணமம்மா. —(தாயே) (2)

இராகம் : சக்கரவாகம்                    தாளம் : ரூபகம்

பல்லவி

ஈசனேயடி யேனுக் கிரங்க
இன்னுந் தாமதமா
பசுபதி யாகிய —(ஈச)

அநுபல்லவி

நகுலகிரியில் வாசனே நமதீசனே
நாரிபாகனே நடராசனே —(ஈச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

புல்புழுவாதி மனிதரீருய்ப்
 புக்கபிறவிக் களவுமில்லேயே
எல்லேயில்லா உலகஆசை
 எள்ளளவேனும் ஒழியுதில்லேயே
வல்லமறலி தூதர்வந்தால்மனக்
 கலக்கமற்றிருக்க வழியுமில்லேயே
மாரனேயெரித்த விழியோய்
 மறலியையுதைத்த கழலோய்
தாரினேயணிந்த முடியோய்
 சஞ்சலந்தீர்த் தருள்புரிகுவாய். —(ஈச) (3)

இராகம் : கேதாரம் தாளம் : ஆதி

### பல்லவி

சகல லோக மாதாவே சரணம் தாயே
சஞ்சலம் தீர்த்தருள்வாயே அம்மா —(சகல)

### அநுபல்லவி

இகமும் பரமும் நல்லசுகமளித் தருளுவாய்
எங்கள் துயரமெல்லாம் இறங்கிட வேசெய்வாய்
—(சகல)

### சரணம்

அறம்பொருள் இன்பமும் ஆண்மையும் ஆயுளும்
திறம்பிடா ஞானமும் சேர்ந்து புகழ்பரந்து
புறங்கொடா வீரராய்ப் புகழுடைத் தீரராய்ப்
புனிதசேவை புரியப்புண்யம் அளித்தருள்வாய்.
—(சகல) (4)

இராகம் : சுத்ததன்யாசி தாளம் : ஆதி

### பல்லவி

அரியும் அயனும் அடிமுடி தேடி
அறியவொண் ணுத அப்பனே யீசா —(அரி)

### அநுபல்லவி

நகுல கிரியில் நயத்தே உறையும்
நம்பனே எம்மை நன்குகாத் தருள்வீர் —(அரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

அன்புடன் பூசைகள் ஆற்றிடு வோர்கள்
அநுதினமும் அடி பணிந்திடு வோர்கள்
ஆலயந் தன்னை அலகிடு வோர்கள்
சிலர் யாவர்க்கும் சிறப்பளிப் பீரே —(அரி)

திருப்பணி செய்யும் சிந்தை கொண்டோர்கள்
தீர்த்த மாடியே தரிசனை செய்வோர்
திருவிழாச் செய்யும் செம்மை யாளர்கள்
பெருமை பெற்றிடப் பேரருள் புரிவீர். —(அரி) (5)

இராகம் : சங்கராபரணம் தாளம் : திஸ்ரஏகம்

பல்லவி

நகுலாம்பிகா தேவியே
நயந்தோமுனை மேவியே —(நகு)

அநுபல்லவி

நித்த மன்புசெய் குணத்தினர்க் கருள்
அளித்து மேவுந் தாயே
உத்தமர் மனத்தில் வாழ்வாய் நீயே
அம்மையே —(நகு)

சரணம்

எங்க ளாருயிரைச் சங்கையின்றி நிதம்
பங்க மின்றிக் காப்பாய் உலகு
எங்கு மான அம்மா ! எமக்குப்பேர்
இன்பந் தாரு மம்மா ! தாயே ! —(நகு) (6)

இராகம் : வசந்தா தாளம் : ஆதி

பல்லவி

ஐயா என்னைப் பார்த்தருளே நான்
அஞ்சினனே உனைக் கெஞ்சினனே —(ஐயா)

அநுபல்லவி

பொய்யாம் வாழ்வில் நான் அழுந்தாமல்
போகாதிகளிலென் மனம் பதியாமல் —(ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

அரைநிமிஷமு முனதடி மறவாமல்
ஆக்கமழியினுமுன் அருள் துறவாமல்
கரையிலா இடர்வந்து கதிகலங்காமல்
கழியுறு பழியொடு நானிறவாமல். —(ஐயா) (7)

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

உனைமறந் திருப்பேனோ ஈசா —(உனை)

அநுபல்லவி

எதைமறந் தாலும்நின் திருவடி மலரினை
என்றும் மறவேனே தேவாதிதேவா —(உனை)

சரணம்

அம்மையும் நீயே அப்பனும் நீயே
ஆண்டருள் புரியும் அண்ணலும் நீயே
செம்மை யாகவே திருநடம் புரிந்திடும்
சிவபெரு மானே திருவருள் தாராய். —(உனை) (8)

இராகம் : தோடி தாளம் : கண்டசாப்பு

பல்லவி

நகுலமலை யுறைசிவசிவா நாயேன் சரண்
நாடிவந் தேபணிந்தேன் அருள்வாய் நன்மைபெறவே
—(நகு)

அநுபல்லவி

பணியும் இளமதியு மொன்றாய்
அணியுஞ் சடை முடியுடையீர்
அறுமுகனும் ஐங்கரனும்
அருகிருந்தே அருள்புரிய —(நகு)

சரணம்

துள்ளிவிளை யாடிவரும் தோகைமயில் பாகா
புள்ளிமறி யேந்திவரும் பூதகண நாதா
அள்ளியிரு கண்பருகும் அன்பர்புகழ் ஈசா
வெள்ளிமலை போல்விளங்கும் வீரவிடை யாளா;
—(நகு) (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : கரகரப்பிரியா　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

பராமுக மேனம்மா அடிமையிடம் —(பரா)

அநுபல்லவி

சுராசுரர் பணியும் தூயவளே தாயே
பராபரனின் வாமபாகத் தமர்ந்தவளே —(பரா)

சரணம்

பிறவிக் கடலின்கரை தாண்டிட நீயருள்செய்
அறவழியில் நடக்கும் ஆர்வத்தை யீந்தருள்செய்
புறச்சம யமெனும் பாழ் நெறிக்கண்
வீழாமலே யருள்தாராய் நகுலாம்பிகா. —(பரா) (10)

இராகம் : பந்துவராளி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

தேவியைத் துதிசெய்வாய் மனமே
திருமுன் பயமெல்லாம் நகுலாம்பிகா —(தேவி)

அநுபல்லவி

மூவுலகிற்கும் அவளே முதன் மாதா
முழுமையா மன்புடன் தினந்தினந் தவறுமல்
—(தேவி)

சரணம்

பூவிலயனும் திரு மாலுடன் இந்திரனும்
போற்றிடுவார் தினமும் சூடிடுவார் பதம்
பூவையர் கலைமகள் அலைமகள் ஆதியோர்
புகழக் கொலுவிருக்கும் புண்ணிய சொரூபிணை
—(தேவி) (11)

இராகம் : அடாணு　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

நீயருளா யெனிற்கதி யேது—அம்மா
நீலகண்டன் பாகத்துறை—உமா —(நீயரு)

அநுபல்லவி

தாயிரங் காவிடில் நாம்உயிர் வாழ்வமோ
சகல உயிர்கட்கும் நீ தாயல்லவோ அம்மா!
—(நீயரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

பருவத ராசன் பெற்ற ஒருமணியே
பசுபதி பாகங் கொண்ட திருமணியே
பாவலர் நாவலர் பாடியே பணிந்திடப்
பாக்ய மெல்லா மீந்தருள் பராபரியே;
—(அம்மாநீ) (12)

இராகம் : சரஸ்வதி                    தாளம் : ஆதி

### பல்லவி

திரு வருள்புரி அம்பிகையே அடியேனிடம்
தேடி வரும்வினைகள் ஓடியொழிந்திடவே —(திரு)

### அநுபல்லவி

மருள்மயமாம்புவி மீதினிலே—உன்றன்
மலரடியலதொரு துணையறியேன் —(திரு)

### சரணம்

ஓங்கார ரூபன் அறுமா முகன்
உளம்மகிழ் மாதா உலக மாதா
நீங்கா தெனதுமனக் கோயிலின் கண்ணே
நீஎன்றும் நிலைநின்று இன்பம் தாதா. —(திரு) (13)

இராகம் : வாசஸ்பதி                    தாளம் : ஆதி

### பல்லவி

நாடு போற்றிடும் நகுலேஸ்வரா
நாம் படும்பாடு தீர்வதில்லையா —(நாடு)

### அநுபல்லவி

நகுலாம்பிகா தேவிபாகனே
நயந்தேமதி சூடியதேனே —(நாடு)

### சரணம்

கொடியநஞ்சை யுண்ட கொள்கைஏதோ
அடிமுடி யறியா ஆதிநாயகா
படியிலே துயரெலாம் பறந்தேபோகக்
கடிதினில் அருள்வாய் கருணாகரா, —(நாடு) (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : கமாஸ் தாளம் : ரூபகம்

பல்லவி

நகுலதேவியே எல்லாஉலக அன்னையே
அம்பா! —(நகு)

அநுபல்லவி

உலகம் யாவையும் நன்குபடைக்கும் நான்முகன்
காத்திடு மாலோன் அழித்திடு மரன்
யாவும் நீயன்றோ அம்பா —(நகு)

சரணம்

மலையரசன் மகளாய் வந்தாய் மாலைசூட்டிஞய்
தலைமைபெற்ற தக்கனுக்கோர் தாட்சாயணியானாய்
வலிமையற்று நாமிங்கு வாடிறோம் மம்மே
வந்து நின்னருள் தந்து எங்களை
வாழவைத்திடாய் அம்பா. —(நகு) (15)

இராகம் : சண்முகப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

சுவாமிதுணை புரிவாய் என்றென்றும்
நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர —(சுவாமி)

அநுபல்லவி

பொய்யா முலகிலே போகங்களி லாழ்ந்தேன்
ஐயாநான் செய்பிழை மெய்யாகவே பொறுத்துச்
—(சுவாமி)

சரணம்

இன்பமுந் துன்பமும் இயைந்திருக்கு முலகில்
இன்பத்திலும் பொல்லாத் துன்பமே யதிகமாம்
தோன்றலும் மறைதலும் சொல்லொணுத் துன்பமே
தோன்றுதலை யொழித்துத் துயரெலாம் தீர்த்தருள்
—(சுவாமி) (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : குந்தலவராளி தாளம் : ஆதி

பல்லவி

உன்னை நினைக்க அருள்தா
எந்நேரமும் —(உன்னை)

அநுபல்லவி

மண்ணைப் பெறவிழைந்து மாதரையும் தாம்விழைந்து
பொன்னைப் பெறமுனைந்து புத்தியுங் கலங்கிடாமல
—(உன்னை)

சரணம்

ஈழநாட்டினில் விளங்கும் எழில்சேர் நகுலாசலம்
சோழநாட்டினில் விளங்கும் தூயசிதம்பரம் ஒக்கும்
பாழும்மனிதர் எண்ணுர் பார்ப்பர் வயிற்றைநிரப்ப
வாழவகை யறியார் வையகமும் உய்ந்திடவே; —(உன்னை) (17)

இராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

இந்தவர மருள்வாய் நாங்கள்
சொந்தமண்ணின்றியே சிந்தைவருந்துறோம்
—(இந்த)

அநுபல்லவி

சுந்தரியாகத் துலங்கிடும் அம்மையே
சந்ததமும்புவி தாங்கிடும் ஈஸ்வரி —(இந்த)

சரணம்

வீடிலா தவரெல்லாம் வீடுகள் பெறுகிறுர்
நாடிலா தவர்களும் நாடு பெறுகிறுர்
பிடிலா தவர்கள்போற் பேதுறுகின் றோம்நாம்
பாடிடும் எம்மையே பண்புடன் காத்தருள் —(இந்த)

பாரினிற் பாலகர் மாதருஞ் சாகிறுர்
மாரகர் குண்டினுல் வயோதிபர் மாள்கிறுர்
சீரழிவை யெல்லாம் செய்திடல் என்னையோ
பூரணி எம்மைநீ புறக்கணிக் கின்றுயோ. (இந்த) (18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : ஹம்சத்வனி தாளம் : ஆதி

பல்லவி

அருள்புரிவாய் நகுலேஸ்வரனே
அடியவரெல்லாம் உன்னடிபெறவே —(அருள்)

அநுபல்லவி

பரிபூர ணனே பரமேஸ் வரனே
பக்தர்க் கருளும் பண்புடை யோனே —(அருள்)

சரணம்

கருணா கரனே கருணை புரிவாய்
காத்திட வேண்டும் கடவுள் மாமணியே
தருமம் தழைக்கவும் அதர்மம் ஒழியவும்
தாரணி தன்னிலே போரணி நீங்கவும் —(அருள்) (19)

இராகம் : அரிகாம்போதி தாளம் : ரூபகம்

பல்லவி

வண்டாடும் கீரிமலையிற் கண்டேன் உன்மேற்
கொண்டேன் அன்பு —(வண்)

அநுபல்லவி

கொண்டல் போலும் கண்ட முடையான்
கொன்றை வேந்தன் பாகங் கொண்டாய் —(வண்)

சரணம்

பாதத் தாமரைகள் கண்டே
பாரினிலுனைப் போற்ற வந்தேன்
மாதவம் யான் செய்யேனென்று
மறைந்து நின்று சோதியாதே —(வண்)
பாதிப் பிறையைச் சூடிடும்பரன்
பாகங் கொண்ட பார்ப்பதியே
ஆதியோடு அந்த மில்லாய்
ஆரணப் பொருளே உன்னை. —(வண்) (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபந்தம்

உ



சிவமயம்

# கீரிமலைச் சிவன்கோயில் வரலாறு

புராதன காலத்தில் திருத்தம்பலேசுரம் எனவும், நகுல முனிவர் அருள்பெற்றபின் நகுலேசுவரம் எனவும் அழைக்கப்படும் கீரிமலைச் சிவன்கோயில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கின்றது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் விசேடம் பெற்றது. இஷ்ட சித்திகளைக் கொடுப்பது; மனோலயத்துக்கும், வியாதி நீக்கம் முதலியவைகளுக்கும் ஏற்றது.

நகுலேச தீர்த்தமானது நகுலகிரிக்கு மேற்குப்பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்தசலமும் வடக்கிலுள்ள உப்புச்சலமும் கலந்து கிழக்குநோக்கிய சிவரூபமும் சத்திரூபமுமாயிருக்கின்ற இயல்பினாலே திவ்விய தீர்த்தமாகும். இது கங்கா சமுத்திர சங்கமம் என்றும், கண்டகி தீர்த்தம் என்றும் பெயர்பெறும்; இத் தீர்த்தத்திலே காலந்தோறும் அளவில்லாத அன்பர்கள் விதிப்படி ஸ்நானஞ்செய்து பயன்பெற்றுவருகிறார்கள்.

முன்னொரு காலத்திலே மேருமலையின் இடப்பாகத்திலே தவஞ் செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினாலே துர்த்தரன் என்னும் வேடன் கீரிமுகம்பெற்றான். உடனே வேடன் நடுநடுங்கி அச்சாபத்துக்கு விமோசனம் கொடுக்கும்படி வேண்டினான்; முனிவர் கருணைகொண்டு "வேடனே நீ என் தரிசனத்தாற் சுத்தனானாய். வேதாரணியத்திற்குத் தெற்கிலுள்ளகடலிலே இலங்கை யென்றொரு தீவு உளது. அதன் வடக்கே ஓர்உயர்ந்தமலை இருக்கிறது. அங்கு சென்று கருமயோகஞ்செய்தால், கீரிமுகம் மாறி மோட்சமும் பெறுவாய்" என்று கூறி யோகமார்க்கங்களை உபதேசித்து ஆற்றுப்படுத்தி அனுப்பினார். கீரிமுகம் பெற்ற அவ்வேடன் இங்குவந்து கங்கா தீர்த்தத்தில் நீராடி மலையிலே ஒரு சாரலிலிருந்து கருமயோகஞ் செய்வானாயினான்; பல்லாண்டுகாலம் தீர்த்த ஸ்நானம் ஈஸ்வரவழிபாடு, செபம் முதலியன செய்துகொண்டிருந்தலைத் திருவுளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சிவபெருமான் உமாதேவியாரோடும் முருகப்பிரானோடுங்கூடி இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினார். அப்போது அவ்வேடனாகிய நகுலமுனிவர் சோமாஸ்கந்தமூர்த்தியைத் தோத்திரஞ் செய்து வணங்கினார். சிவபெருமான், "அறிஞனே! நீ இப்போது அழகியமுகம் பெறுவாய்; நீ தவஞ் செய்த இம்மலை நகுலமலையென்றும், உனக்கு அருள்செய்தஎம் நாமம் நகுலேசுரர் என்றும், தேவிநாமம் நகுலாம்பிகை என்றும், தீர்த்தம் நகுலேச தீர்த்தம் என்றும் வழங்குக." என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். நகுலமுனிவர் பின்னும் பலகாலம் தவஞ்செய்து மோட்சமடைந்தார்.

திசையுக்கிரசோழன் மனைவியாகிய கனகாங்கி என்பவள் குதிரைமுகமுடைய கின்னரப் பெண்ணொருத்தியின் சாபத்தினாலே குதிரைமுகமுடைய மாருதப்புரவீகவல்லியென்னும் பெண்ணைப்பெற்றாள்; அப்பெண் குன்மநோயும் உடையவளாயிருந்தாள்; வெட்கத்தினால் வளைந்த கழுத்துடையவளாய்ப் பல தீர்த்தங்களாடி இறைவனைத் துதித்து வந்தாள்; நகுலேசுவரப் பெருமான் அவளது கனவிலே சந்நியாசியாகத் தோன்றி "மாருதப் புரவீக வல்லியே, யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள நகுலேச தீர்த்தம் கங்கையிலும் மேன்மையுடையது; அத்தீர்த்தத்திலே முழுகிச் சுகமடைவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவள் அவ்வாறே அத் தீர்த்தத்திலாடிக் குதிரைமுகமும் குன்மநோயும் மாறப்பெற்றாள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, இராமர், சுசங்கிதன், நளமகாராசன், அருச்சுனன் முதலிய பலர் நகுலேசுவரத்துக்கு வந்து நகுலேச தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நகுலாம்பிகா சமேத நகுலேசுவரப் பெருமானைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு இட்ட சித்திகளைப் பெற்று உய்ந்தார்கள்.

நகுலேசுவராலயம் போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப் பட்டது. ஆங்கிலேயர் காலத்திலே 1878ஆம் ஆண்டு வெகுதானிய ௵ வைகாசி மீ 24ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கீரிமலைச் சிவன்கோயில் பற்றி ஒரு விஞ்ஞாபனம் தமது கையொப்பத்தோடு வெளியிட்டார்கள். "யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே 2 மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன்கோயில் இருந்தது" என அந்த விஞ்ஞாபனம் தொடங்குகிறது. அந்த விஞ்ஞாபனத்தில் கீரிமலையில் சிவன் கோயில் கட்டுவித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்விக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் சனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிவதருமத்துக்கு எவ்வெவ்வழிகளில் உதவலாமென்பது பற்றியும் விரிவாகக் காட்டியுள்ளார்கள்.

அப்போது ஷெ கோயிலை அமைப்பதற்கு முன்னின்றுழைத்தவரும் கல்வியறிவு, ஒழுக்கம் என்பவற்றில் சிறந்தவருமாகிய பிரம்மஸ்ரீ கா. தியாகராசாக் குருக்கள் அவர்கள் 1882 ஆம் ஆண்டு சித்திரபானு ஸ்ரீ ஐப்பசி மீ அச்சிடுவித்து வெளியிட்ட ஆவேதனத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இக்கோயில் கட்டுவிப்பதற்காக எடுத்துக் கொண்டமுயற்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. 1879இல் சைவசமயிகளுடைய பாக்கியக் குறைவினலே நாவலரவர்கள் சிவபதம் அடைந்துவிடக் குருக்கள் மாரது ஊக்கத்தினுலும், வண்ணைர்பண்ணை வை. ஆறுமுகம் போன்ற சைவஅன்பர்களது உதவியினுலும் திருப்பணிவேலைகள் செய்யப்பட்டு 1895ஆம் ஆண்டு மன்மதஸ்ரீ ஆனிமீ சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்காலத்தில் நித்திய நைமித்திக பூசைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றதாக அறிகிறேம். தேர்த் திருவிழாவிலன்று 5 தேர்கள் இழுக்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறேம். 18-7-1898இல் தொல்புரம் ஸ்ரீ மு. ஆறுமுகம்பிள்ளையின் உபயமாக வட்டுநகர் சு. சின்னப்பாசாரியாற் செய்யப்பட்ட இடபவாகனம் இக்கோவிலின் பழமையைக்காட்டும் சின்னங்களில் ஒன்ருக விளங்கிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது கோயிற் சுற்றுப்பிரகாரக் கொட்டகைகளெல்லாம் தென்னேலைக் கிடுகுகளால் வேயப்பட்டிருந்தன.

1918 ஆம் ஆண்டு காத்திராப்பிரகாரமாகக் கோயில் தீக்கிரையானது. கோயில் தீக்கிரையானபோது அங்கு நின்ற அடியார்கள் பெரிய இடபவாகனத்தைக் கஷ்டப்பட்டு வெளியே கொண்டுவந்து சேர்த்தார்களென அறிகிறேம். அக்காலத்தில் ஷெ கோயிலின் ஆதீனகர்த்தராயிருந்த ஸ்ரீமத் தி. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் சிறிது காலம் மனம் களைத்து இருந்தாராயினும் பின்பு தாம் என்ன கஷ்டப்பட்டாயினும் கோயிலை நல்லநிலைக்கு ஆக்கவேண்டுமென முயன்று தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்துத் திருப்பணிகள் செய்வித்தார்கள். 1947ஆம் ஆண்டு அவர்கள் சிவபதம் எய்தியமையால் கோயிலின் வளர்ச்சி சிறிது தடைப்பட்டது. எனினும் அன்னரது சிரேஷ்டபுத்திரரும் தற்போது கோயிலின் ஆதீனகர்த்தருமாகவுள்ள சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்கள் தந்தையாரிலும் கூடிய ஊக்கமெடுத்து மிதித்திருப்பணி வேலைகளையுஞ் செய்வித்து 1953ஆம் ஆண்டு இந்தியாவிலிந்து குருக்கள்மாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பித்துக் கும்பாபிஷேகமும் நடத்தினார்கள். 1955 ஆம் ஆண்டு சிவன்வாசல் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 1973 ஆம் ஆண்டும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டு தேவிவாசல் மஹோற்சவம் ஆரம்பமானது. நித்திய நைமித்திக பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. காலந்தோறும் பல திருப்பணிவேலைகள் நிறைவேறி வருகின்றன.

மாத சங்கிராந்தி தீர்த்தம், வருஷப்பிறப்பு உற்சவம், சித்திராபூரணை உற்சவம், வைகாசிவிசாக அபிஷேகம், ஆனிஉத்தர நடேசர் அபிஷேகம், ஆவணிமூல உற்சவம், நவராத்திரி விசேட பூசை, மானம்பூ உற்சவம், புரட்டாதிச் சனிவழிபாடு ஐப்பசிச் சுக்கிரவார உற்சவங்கள், கௌரிவிரத விசேடபூசை, தீபாவளி விசேடபூசை, கார்த்திகைச் சோமவார உற்சவங்கள், கார்த்திகைத் தீபக்காட்சி, திருவெம்பாவைப் பூசைகள், ஆர்த்திராதரிசனம், சுவர்க்கவாயிலேகாதசி உற்சவம், தைச்சங்கிராந்தித் தீர்த்தம், தைப்பொங்கல் உற்சவம், தைப்பூச அபிஷேகம், மாசிமகத் தீர்த்தம், மகாசிவராத்திரி நான்குஜாமப்பூசை அதிகாலை தீர்த்தம், பங்குனி உத்தர அபிஷேகம், திருவிழா என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

சிவராத்திரி தீர்த்தத்தை இறுதியாகவுடைய மாசிமஹோற்சவம் 15 நாள் நடைபெறுகின்றது. தேவி மஹோற்சவம் சித்திரை வருடப்பிறப்பை இறுதியாகவுடைய 12 நாள் நடைபெறுகின்றது. ஒவ்வொரு வாரத்திலும் வரும் திங்கட்கிழமை சாயரட்சையில் சோமவார உற்சவமும், புராணபடனமும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பிரதோஷத்திலும் வெள்ளிக்கிழமைகளிலும் பூசை திருவிழா என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு பூரணையிலும் ஸ்ரீசக்கரபூசை நடைபெறுகிறது. சிவநேயச் செல்வர்கள் யாவரும் வந்து தரிசித்து ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்பெருமானின் திருவருளைப்பெற்று உய்வார்களாக.

இக்கோயிலிற் செய்யப்படவேண்டிய திருப்பணி வேலைகள் பல இருக்கின்றன. இராசகோபுரவேலை ஆரம்பநிலையிலே இருக்கின்றது. வசந்தமண்டபவேலை முற்றுப்பெறவில்லை. சுற்றுப்பிரகாரக் கூரை ஓடுகள், சலாகைகள் பழுதடைந்துள்ளன; இலங்கை இராணுவம் உட்புகுந்தமையால் ஏற்பட்ட நஷ்டங்கள் பலவுள. இவற்றைத் திருத்தவும், குறைவேலைகளை முடிக்கவும் ஏராளமான பணம்தேவை. அடியார்கள் தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்து பயன்பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நன்றி நவிலல்

—○(★)○—

நகுலாம்பிகாதேவி சமேத
நகுலேஸ்வரப்பெருமான்மீது
பாடிய பத்திரசக் கீர்த்தனைகள்
என்னும் இச்சிறுநூலுக்கு அன்
புடன் ஆசியுரை வழங்கிய ஆதீன
கர்த்தர் அவர்களுக்கும், எனதுபாடல்
களைப் பொறுமையுடன் படித்துப்பார்த்து
ஆலோசனைகள் கூறி ஆதரவளித்தபண்டிதர்
க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும்,
இசைமணி பொ. முத்துக்குமாரு அவர்களுக்கும்
கஷ்டமான காலமாகவிருந்தும் மிக விரைவில்
அழகாக அச்சிட்டுதவிய குகன் அச்சகத்
தினருக்கும் எனது நன்றிஉரியதாகுக.

5 - 1 - 88 —ஆக்கியோன்—

குகன் அச்சகம் - தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org